சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

**புவியியல்**

**தரம் - 08 இறுதித் தவணைப் பரீட்சை-2016**

புள்ளி

சுட்டெண் : ……………………..…………

பகுதி - 1

நேரம்
2 மணித்தியாலம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1-5 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1) ஞாயிற்றுத் தொகுதியின் மிகப் பெரிய கோள்
   1. வெள்ளி  2. செவ்வாய்  3. சனி  4. வியாழன்

2) தென்னாசிய வலயத்தில் அதிக காட்டு வளங்களைக் கொண்ட நாடு
   1. இலங்கை  2. இந்தியா  3. நேபாளம்  4. பூட்டான்

3) இமாலயப் பிரதேசங்களில் வாழும் பழங்குடியினர்
   1. புட்டியா  2. லெப்ஸா  3. சேர்பா  4. தராட்

4) கல்வி அபிவிருத்திக்காக இலங்கை அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுள் ஒன்று
   1. வைத்தியசாலைகள் அமைத்தல்  2. இலவசபாடநூல் விநியோகம்
   3. வீதி அபிவிருத்தி  4. சமூக நலன்புரி சேவைகள்

5) இலங்கையில் 1. 50000 இடவிளக்கவியல் தேசப்படத்திலுள்ள பௌதீக அம்சங்களுள் ஒன்று.
   1. மலைத்தொடர்  2.வீதி
   3. விவசாயம்  4. கட்டிடம்

- **6-10 வரையான வினாக்களில் உள்ள கீறிட்ட இடங்களை நிரப்புக.**

06. சூரியன் சந்திரன் ஆகியவற்றின் ஒன்றிணைந்த ஈர்ப்பு சக்தியினால் ……………………….. உருவாகியுள்ளது.

07. தென்னாசிய வலய நாடுகளுக்கு ஜூன் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் …………………………………… கிடைக்கின்றது..

08. பங்களாதேசில் தங்கநார் என ……………………………….……… அழைக்கப்படுகிறது.

09. தெற்காசிய வலயத்தில் அதிகளவு எழுத்தறிவு வீதம் கொண்ட நாடாக …………………………………….. விளங்குகின்றது.

10. உயர் நிலத்திலிருந்து தாழ் நிலத்தை , நோக்கி சமவுயர் கோடுகள் வெளிநோக்கி வளைந்துள்ள தரைத்தோற்ற அம்சம் …………………………..…… எனப்படும்.

- **11- 15 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக.**

11) மத்திய நெடுங்கோட்டை அடிப்படையாகக் கொண்டு நியம நேரம் கணிப்பிடப்படுகின்றது.( )

12) உலகில் அதிகூடிய மழைவீழ்ச்சியைப் பெறும் இடம் சிறாப்பூஞ்சியாகும் . ( )

13) விளையாட்டுப் பொருள் உற்பத்திக்குப் பாகிஸ்தானில் சிந்து பிரதேசம் பிரசித்தி பெற்றதாகும். ( )

14) தாய்மார் இறப்பு குறைவடைதல் சமூக விருத்தி ஏற்பட காரணமாக அமையும் ( )

15) 1.50000 இடவிளக்கவியல் தேசப்படத்தில் நெற்பயிர்ச் செய்கைக்கான குறியீடு வர்ணம் மஞ்சள் ஆகும். ( )

- **16 - 20 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தென்னாசிய வலய தேசப் படத்தைக் கருத்தில் கொண்டு விடையளிக்க.**


16) A - எழுத்தால் காட்டப்படும் மலைத் தொடர் யாது?

17) B - எழுத்தால் காட்டப்படும் நாட்டின் தலை நகரம் யாது?

18) தென்னாசியாவில் அதிகமான இரும்புத் தாதை உற்பத்தி செய்யும் நாட்டை குறிக்கும் எழுத்து எது?

19) இப்படத்தில் D என்ற எழுத்தால் காட்டப்படும் நதி எது?

20) படத்தில் காட்டப்பட்டுள்ள நாடுகளுள் எழுத்தறிவு மட்டம் குறைவாக உள்ள நாட்டை குறிக்கும் எழுத்து எது?




(40 புள்ளிகள்)

சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

| புவியியல் | தரம் - 08 இறுதித் தவணைப் பரீட்சை-2016 | புள்ளி |
|---|---|---|
| சுட்டென் : ....................................... | பகுதி - II | நேரம் மணித்தியாலம் |

- **1 ம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

1) i. கீழே தரப்பட்டுள்ளவற்றை உலகப்புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

A - கிறின்விச் கோடு
B - குவாங்கோ நதி
C - ரொக்கி மலைத் தொடர்
D - கருங்கடல்
E - பிரேசிலியா மேட்டு நிலம்
F - விக்டோரியா ஏரி

(12 புள்ளிகள்)

2) A - ஞாயிற்றுத்தொகுதியில் உள்ள உட்புறக்கோள் ஒன்றை பெயரிடுக.

B - ஞாயிற்றுத்தொகுதியில் உள்ள வெளிப்புறக் கோள் ஒன்றை பெயரிடுக

C - புவியின் உபகோள் யாது?

(3 புள்ளிகள்)

ii. A - சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை யாது?
B - சூரிய வெளிச்சம் எவ்வாறு உண்டாகின்றது?

(4 புள்ளிகள்)

iii. A - வளி மாசடைவதற்கான மானிடக் காரணிகள் இரண்டினை தருக.

(2 புள்ளிகள்)

B - உயிர் கோளத்திலிருந்து மனிதனுக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டினை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

(3 புள்ளிகள்)

3) i. கீழே தரப்பட்டுள்ள பௌதீக அம்சங்களைத் தன்னகத்தே கொண்ட நாடுகளைக் குறிப்பிடுக.

A – சுலைமான் மலை :

…………………………………………………………………………

B- பஞ்சாப் சமவெளி : ……………………………………………………………………

C- பிரமபுத்திரா நதி : ……………………………………………………………………

(3 புள்ளிகள்)

ii. A – தென்னாசிய வலயத்தின் காலநிலையில் உள்ள முனைப்பான பருவக்காலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

B - இலங்கையில் காணப்படும் கனியவளங்கள் நான்கினைக் குறிப்பிடுக..

(4 புள்ளிகள்)

iii. A - தெற்காசிய வலய நுகர்வு விவசாயத்தில் காணப்படும் தனித்துவமான பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

B - தெற்காசிய வலய நாடுகளில் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதால் ஏற்படும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விளக்குக.

(3 புள்ளிகள்)

4) A -இந்தியாவில் சக்தி வலுவாகப் பயன்படுத்தப்படும் விவசாயக்

கழிவுப் பொருள் ஒன்றைக் குறிப்பிடுக.

B - பங்களாதேசின் சணல் உற்பத்திப் பிரதேசமொன்றைக் குறிப்பிடுக.

C- பாகிஸ்தானின் கிராமியக் கைத்தொழிலொன்றைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ii. சணல் கைத்தொழில் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்குகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii. A - மாலைத்தீவுக்குப் பெருமளவில் சுற்றுலாப் பயணிகளாக வருகை தருவோரின் நாடுகள் இரண்டினை குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

B - மாலைதீவுகளில் சுற்றுலாக் கைத்தொழில் விருத்திக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(3 புள்ளிகள்)

5) i. கீழே குறிப்பிட்டுள்ள கைத்தொழில்களுக்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களைக் குறிப்பிடுக.

A - டயர் உற்பத்தி

B - சீமெந்து உற்பத்தி

C - சீனி உற்பத்தி

(3 புள்ளிகள்)

ii. A- இலங்கையில் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் இரண்டை குறிப்பிடுக.

B - சுகாதாரத் துறையை மேம்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் இரண்டை குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii. A- குடும்பம் ஒன்று வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வழிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

B- ஒரு நாட்டில் வாழும் மக்களின் ஆள்வீத வருமானம் அதிகரிப்பதனால் ஏற்படும் பயன்கள் இரண்டை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விளக்குக.

(3 புள்ளிகள்)

6) i. கீழே தரப்பட்டுள்ள குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ள நிர்வாக எல்லைகளைக் குறிப்பிடுக.


(A) + -- + -- +

(B) +.+.+.+.+

(C) ___ .. ____ .. _____

(3 புள்ளிகள்)

ii. கீழே காட்டப்பட்டுள்ள புவியியல் அம்சங்களைப் பெயரிடுக.




(4 புள்ளிகள்)

iii. கீழே தரப்பட்டுள்ள கலாச்சார அம்சங்களைப் பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி வரைந்து காட்டுக.

A - இறப்பர் பயிர்ச் செய்கை

B - வீட்டுத் தோட்டம்

C - தேயிலை

D - தெங்கு

E - திரிகோண கணித நிலையம் (5 புள்ளிகள்)